2003 மார்ச் 24] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

அமெரிக்கா முன்வரவேண்டுமென்ற ஒரு தீர்மானம் இந்த அவையிலே நிறைவேற்ற வேண்டுமென்று, தமிழக மக்களின் சார்பில், இந்திய மக்களின் சார்பில் நான் வேண்டுகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே சமீபத்திலே பல்வேறு மாநிலங்களிலே, சட்டமன்றக் கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிற மாநிலங்களிலெல்லாம்கூட, குறிப்பாக மேற்கு வங்காளம் போன்ற மாநிலத்திலேகூட இப்படிப்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. உலகத்திலே அமைதி வேண்டும் என்று சொல்லக்கூடிய நேரத்தில் அமெரிக்கர்களுடைய ஏகாதிபத்தியம் ஈராக் நாட்டின்மீது இன்று கடுமையான போர் புரிந்து பல துயரச் சம்பவங்கள் பத்திரிகையிலே செய்தியாக வந்து கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், நமது சட்டமன்றத்தின் சார்பாக மனித நேயத்தோடு ஒரு கண்டன தீர்மானத்தை நிறைவேற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

(ஆ) விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையிலே விவசாயிகளுக்குத் தொடர்ந்து வழங்கப்பட்டு வந்த இலவச மின்சாரம் ரத்து செய்யப்பட்டிருக்கிறது...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவையெல்லாம் ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கின்றன; என்னுடைய ஆய்விலே இருக்கின்றன. பிறகு எடுத்துக்கொள்ளலாம்.

4. வரவு-செலவுத் திட்டம், 2003-2004, பொது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2003-2004* ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம். திரு. மு.க. ஸ்டாலின்.

***திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2003-2004* ஆம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெறக்கூடிய விவாதத்திலே நானும் கலந்து கொண்டு திராவிட